**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,ஆண்டிபட்டி**

முன்னிலை: **திரு.எஸ்.பாஸ்கரன், எம்.ஏ.,பி.எல்.,**
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
ஆண்டிபட்டி.

**2017-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 4-ம் நாள் சனிக் கிழமை**

**ஆண்டுப் பட்டிகை வழக்கு எண்.1/2017**

**அரசு சார்பாக**
**சார்பு ஆய்வாளர்,**
**கடமலைக்குண்டு காவல்நிலையம்,**
**குற்ற எண்.468/2016.** .. குற்றமுறையிடுபவர்

**/எதிர்/**

**சிவனான்டி வயது 42/2016**
**த.பெ.மாயத்தேவர்**
**ஒட்டனை.** .. எதிரி

*****

WEB COPY

இந்த வழக்கு கடந்த **03.01.2017**-ம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு வாதி தரப்பில் கற்றறிந்த அரசு உதவி குற்றத்துறை வழக்கறிஞர் நிலை 1 அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் எதிரி தாமே நேரில் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டு இறுதி விசாரணைக்கு பின்பு இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்..

**தீர்ப்புரை**

1) இவ்வழக்கின் வாதி வைரமணியும் எதிரியும் கணவன் மனைவி என்றும் நீர் கஞ்சா, சாராயம் பிராந்தி பீடி சிகிரெட் குடிக்கும் பழக்கம் உடையவர் என்றும் கடந்த 21.10.2016ம் தேதி காலை 6.00 மணிக்கு வாதி வைரமணியிடம் எதிரி கஞ்சா சாராயம் குடிக்க காசு கேட்டு தராததால் கோத்தா, கொம்ம, என அசிங்கமாக பேசி பெண் என்றும் பாராமல் கீழே தள்ளிவிட்டு கொல்லாமல் விடமாட்டேன் என வா்மித்த குற்றம் புரிந்ததாக எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 506(1) மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டம் பிரிவு 4-ன்கீழ் கடமலைக்குண்டு சாா்பு ஆய்வாளா் குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளாா்.

2) வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டவுடன் வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் எதிரிக்கு இலவசமாக கு.வி.மு.ச பிரிவு 207-ன்படி வழங்கப்பட்டு எதிரிக்கு போதிய கால அவகாசம் கொடுக்கப்பட்டு எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 506(1) மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டம் பிரிவு 4-ன்கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டு தமிழில் விளக்கி வினவியபோது எதிரி குற்றச்சாட்டை மறுத்தார். அதனால் அரசுத்தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்பட்டன.

3) இந்த வழக்கில் அரசுத்தரப்பில் மொத்தம் 2 சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளன. திருமதி.வைரமணி அசா.1 ஆகவும், திரு.சக்கரவர்த்தி - முதல்நிலை காவலர் அசா.2 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளனர்.

WEB COPY

**<u>அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சிய சுருக்கம்:</u>**

4) இந்த வழக்கில் அசா.1 தன்னுடைய புகார் மற்றும் கு.வி.மு.ச பிரிவு 161(3) வாக்குமூலத்தில் கூறியுள்ளதற்கு மாறாக சாட்சியம் அளித்துள்ளதால் அசா.1 பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டுள்ளார்.

அசா.2ஆன சக்கரவர்த்தி தனது சாட்சியத்தில் தான் தற்போது கடமலைக்குண்டு காவல்நிலையத்தில் முதல்நிலை காவலராக பணிசெய்து வருவதாகவும் வழக்கின் புலன் விசாரணை அதிகாரியின் கையொப்பமும் விசாரணையும் தனக்கு நன்கு தெரியும் என்றும் கடந்த 21.10.2016ம் தேதி அசா.1 காவல்நிலையத்துக்கு வந்து கொடுத்த புகாரின் அடிப்படையில் சிறப்பு சார்பு ஆய்வாளர் செல்வராஜ் அவர்கள் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார் என்றும் அதன்பின்னர் வழக்கின் சம்பவ இடத்திற்கு சென்று சம்பவ இடத்தை சாட்சிகள் மாரி, மணி முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து அதன்பின்னர் சாட்சிகள் 1 முதல் 6 வரையிலானவர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அதன்பின்னர் 21.10.2016ம் தேதி

11 மணிக்கு மயிலாடும்பாறை பஸ்நிறுத்தம் அருகே எதிரியை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி வழக்கின் புலன் விசாரணையை முடித்து எதிரி மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளது குறித்து சாட்சியம் அளித்துள்ளார். இத்துடன் அரசுத்தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது.

5) பின்பு எதிரிக்கு எதிரான சாட்சிகளின் சாட்சிய சுருக்கத்தை கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)-ன்கீழ் எடுத்துக்கூறி வினவியபோது எதிரி பொய் சாட்சி எனவும், பொய் வழக்கு எனவும், தனது தரப்பில் விசாரிக்க சாட்சியம் இல்லை எனவும் கூறினார். அதனால் இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது.

6) இப்போது தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 506(1) மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டம் பிரிவு 4-ன்கீழான குற்றச்சாட்டு அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா?. என்பதே தீர்வுக்குரிய பிரச்சனை ஆகும்.

WEB COPY

**<u>தீர்வு:</u>**

7) இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. இந்த வழக்கில் எதிரி அசா.1ஐ கஞ்சா, சாராயம் குடிக்க காசு கேட்டு தராததால் அசிங்கமான வார்த்தைகளால் பேசி தள்ளிவிட்டு கொல்லாமல் விடமாட்டேன் என வா்மித்த குற்றம் புரிந்ததாக அசா.1 கொடுத்த புகாரின் அடிப்படையில் கடமலைக்குண்டு காவல்நிலைய குற்ற எண்.468/2016, இதச பிரிவுகள் 294(பி), 506(1) மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டம் பிரிவு 4-ன்படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு வழக்கின் புலன் விசாரணையை முடித்து அரசுத்தரப்பில் எதிரி மீது மேற்படி சட்டப் பிரிவுகளின் அடிப்படையிலேயே குற்றப் பத்திரிக்கையும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கில் அரசுத்தரப்பில் அசா 1,2 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அரசுத்தரப்பு சான்றாவணம் 1 முதல் 5 குறியீடு

செய்யப்பட்டுள்ளது. எதிரி தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

8) அரசுத்தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டைப் பொறுத்து அசா.1 வைரமணி தனது சாட்சியத்தில் ஆஜர் எதிரி தன் கணவர் என்றும் தனக்கு திருமணம் ஆகி 15 வருடங்கள் ஆகிறது என்றும் 1 பெண் குழந்தையும் 4 ஆண் குழந்தையும் இருக்கின்றனர் என்றும் தனக்கும் கணவருக்குமிடையே குடும்பம் சம்மந்தமாக சிறு பிரச்சனை இருந்து வந்தது என்றும் கடந்த 21.10.2016ம் தேதி காலை 6 மணிக்கு தான் வீட்டில் இருந்தபோது தனக்கும் கணவருக்குமிடையே குடும்ப பிரச்சனை ஏற்பட்டது பிறர் சொன்னதின் அடிப்படையில் தன் கணவர் மீது நடவடிக்கை எடுக்கும்படி புகார் வாக்குமூலம் கொடுத்ததாகவும் அதில் என்ன எழுதியிருந்தது என்று தெரியாது என்றும் சம்பவத்தின்போது காயம் ஏற்படவில்லை என்றும் கணவர் தன்னை ஆபாசமாக திட்டவில்லை என்றும் கொலை மிரட்டல் செய்யவில்லை என்றும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கைரேகை தன்னுடையதுதான் என்றும் அந்த ரேகை மட்டும் அசாஆ.1 எனவும் அரசுத்தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதால் பிறழ் சாட்சியாக கருதப்பட்டுள்ளார். அசா.2ஆன சக்கரவர்த்தி தனது சாட்சியத்தில் தான் தற்போது கண்டமனூர் காவல்நிலையத்தில் முதல்நிலை காவலராக பணிசெய்து வருவதாகவும் இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியின் கையொப்பமும் விசாரணையும் தனக்கு நன்கு தெரியம் என்றும் கடந்த 21.10.2016ம் தேதி அசா.1 நிலையத்தில் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று சிறப்பு சார்பு ஆய்வாளர் வழக்கு பதிவு செய்து அச்சு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து அதன்பின்னர் சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தை சாட்சிகள் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து அதன்பின்னர் வழக்கின் சாட்சிகள் 1 முதல் 6 வரையிலானவர்களை

WEB COPY

விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அதன்பின்னர் எதிரியை 21.10.2016ம் தேதி 11 மணிக்க மயிலாடும்பாறை பஸ்நிறுத்தம் அருகே கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி அதன்பின்னர் வழக்கின் புலன் விசாரணையை முடித்து சார்பு ஆய்வாளர் எதிரி மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளது குறித்து சாட்சியம் அளித்துள்ளார். இவ்வழக்கில் அசா.1 அரசுத்தரப்பு வழக்கிற்கு எதிராக பிறழ் சாட்சியாக சாட்சியம் அளித்திருந்தாலும் இவ்வழக்கின் எதிரி இந்நீதிமன்றத்தில் குற்றத்தை ஒப்புக்கொள்வதாக தன்னிச்சையாக ஒரு குற்ற ஒப்புதல் மனு தாக்கல் செய்து அம்மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.

9) எனவே எதிரிக்கு வழங்கவிருக்கும் தண்டனை குறித்து எதிரியிடம் வினவப்பட்டபோது,

WEB COPY

> **“நான் மிகவும் ஏழ்மையான சூழலில் எனது வாழ்க்கையை நடத்தி வருகிறேன். எனக்கு 1 மகளும், 4 மகன்களும் உள்ளனர். நான் மிகவும் கஷ்ட சூழலில் எனது பிள்ளைகளை வழி நடத்தி செல்கிறேன். இதற்கிடையே எனக்கும் என் மனைவிக்கும் இடையே சிறிது வாய் தகராறு ஏற்பட்டது. அவ்வழியே வந்த காவல்துறையினர் வீட்டில் சத்தம் கேட்பதை பார்த்து விசாரிப்பதற்காக உள்ளே நுழைந்து என் மனைவியிடம் வலுக்கட்டாயமாக புகார் வாங்கி என் மீது வழக்கு பதிவு செய்து என்னை சிறையில் அழைத்துவிட்டார்கள். இன்நிலையில் நான் இல்லாமல் என் குடும்பம் மிகவும் வருமையில் தவிக்கின்றனர்.”**

எனக் கேட்டுக் கொண்டார்.

10) எதிரிக்கு வழங்கவிருக்கும் தண்டனை குறித்து இந்நீதிமன்றம் ஆராய்ந்து பார்க்கும்போது, எதிரியின் வயது. வருங்காலம் மற்றும் இந்த வழக்கின் தன்மை ஆகியவற்றை கருத்தில் கொண்டு எதிரிக்கு திருந்தி வாழ ஒரு வாய்ப்பு கொடுத்து, நீதியின் நலன் பொருட்டு கீழ்கண்டவாறு எதிரிக்கு தண்டனை வழங்குவது உகந்ததாக இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவாக எதிரியை இதச பிரிவுகள் 294(பி), 506(1) மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டம் பிரிவு 4-ன்படி குற்றவாளி எனத் தீர்மானித்து, இதச பிரிவு 294(பி)-ன்படியான குற்றத்திற்கு 1 மாதம் மெய்க்காவல் சிறைத்தண்டனை விதித்து, மேலும் இதச பிரிவு 506(1)-ன்படியான குற்றத்திற்கு 1 மாதம் மெய்க்காவல் சிறைத்தண்டனை விதித்தும், மேலும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டம் பிரிவு 4-ன்படியான குற்றத்திற்கு 1 மாதம் மெய்க்காவல் சிறைத்தண்டனை விதித்தும் இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரி கடந்த 21.10.2016-ம் தேதி முதல் இன்று 04.02.2017-ம் தேதி வரை நீதிமன்ற காவலில் இருந்து வந்துள்ளார். எதிரி நீதிமன்ற காவலில் இருந்த காலத்தை தண்டனை காலமாக பாவித்து கு.வி.மு.ச பிரிவு 428-ன்கீழ் கழித்துக்கொண்டு தண்டனையை சமகாலத்தில் அனுபவிக்க உத்தரவிடப்படுகறிது. எதிரி சிறையில் இருந்து வருவதால் அபராதத் தொகை விதிக்கப்படவில்லை.**

11) இந்த வழக்கில் அரசுத்தரப்பில் சொத்துக்கள் எதுவும் ஆஜர்படுத்தப்படவில்லை.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால்

WEB COPY

தட்டச்சில் விவரிக்கப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழைநீக்கம் செய்யப்பட்ட பின்னர் 2017-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 4-ம் நாள் சனிக் கிழமை இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
ஆண்டிபட்டி.

**<u>அரசுத்தரப்பு சாட்சிகள்</u>**:-

அசா.1 திருமதி.வைரமணி

அசா.2 திரு.சக்கரவர்த்தி - முதல்நிலை காவலர்

**<u>அரசுத்தரப்பு சான்றாவணங்கள்:</u>**

அசா.ஆ.1 புகார் வாக்குமூலத்தில் உள்ள அசா.1ன் கையெழுத்து

அசா.ஆ.2 அசா.1 கொடுத்த புகார் வாக்குமூலம்

அசா.ஆ.3 அச்சு முதல் தகவல் அறிக்கை

அசா.ஆ.4 22.10.2014-ம் தேதியிட்ட பார்வை மகஜர்

அசா.ஆ.5 22.10.2014-ம் தேதியிட்ட மாதிரி வரைபடம்

**<u>அரசுத்தரப்பு சான்றுபொருள்</u>**:- இல்லை

**<u>எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணம், சான்றுபொருள்:</u>** இல்லை

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
ஆண்டிபட்டி.

**<u>குறிப்பு</u>:-**

1) வழக்கு முடிவு காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.
2) சாட்சி மூன்று முறைக்கு மேல் அழைக்கப்படவில்லை.
3) சொத்து பற்றிய உத்தரவு இல்லை.
4) விசாரணைக் காலத்தில் எதிரி சிறையில் இருந்தார்.
5) எதிரிக்கு அபராதத்தொகை விதிக்கப்படவில்லை.

WEB COPY